27th February 1963]

Avenue trees (leasing of)

* 82 *Q.*—Sri R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any proposal to lease the usufructs of avenue trees to the panchayats instead of panchayat union councils?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : Orders have since been issued in Memorandum No. 243179 P-2/61-10, R.D. & L.A., dated 17th November 1962 that the usufructs of trees standing on road porambokes of the Highways and Rural Works Department should be leased out to the panchayats instead of to panchayat unions.

திரு. ம. கமலநாதன் : *முன்னே இருந்த திட்டமே நன்றாக இருந்தது. நிழற்சாலை மரங்கள் ஒருசில பஞ்சாயத்துகளில் தான் இருக்கின்றன. மற்றவைகளில் இல்லை. ஏறக்குறைய பரவலாக இதன் பலன் எல்லாவற்றுக்கும் கிடைத்தால் நலமாக இருக்கும். ஆகவே பஞ்சாயத்துகளுக்குப் பதிலாக பஞ்சாயத்து யூனியனை பொதுக் குத்தகைக்குவிட ஏற்பாடு செய்ய முடியுமா என்று அறியவிரும்புகிறேன்.*

கனம் திரு. எம். பக்தவத்சலம் : *அந்த அந்த பஞ்சாயத்து ஏரியாக்களில் இருக்கிற மரங்களின் பலன் அந்த அந்த பஞ்சாயத்துக்களைச் சாருவது தான் நலம். எல்லாவற்றுக்கும் அதைப் பகிர்ந்து கொடுக்கவேண்டுமென்று சொல்வது நல்லது அல்ல என்று நான் கருதுகிறேன். அதை கனம் அங்கத்தினர்களும் ஒத்துக்கொள்வார்கள் என்று நான் நினைக்கிறேன்.*

கனம் சபாநாயகர் : *கேள்வி பதில்கள் முடிவடைந்தன.*

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]**

III.—CALLING ATTENTION TO THE REVERSION OF CRAFT INSTRUCTORS IN SCHOOLS.

திரு. எம். எஸ். செல்வராஜன் : *கனம் தலைவரவர்களே, நமது ராஜ்ய கல்வி இலாகாவின் சமீபகால சுற்றறிக்கை காரணமாக நமது ராஜ்யம் முழுமையிலுமுள்ள உயர்தர ஆரம்பப் பாடசாலை, ஆதாரப் பாடசாலைகளில் வேலை பார்த்து வந்த கைத்தொழில் ஆசிரியர்கள், எந்தவிதமான முன்னறிவிப்புமின்றியே பகுதி நேர கைத்தொழில் ஆசிரியர் கிரேடு குறைக்கப்பட்டு அதன் காரணமாக வேலை ஸ்திரமற்ற நிலையும், மிகவும் குறைந்த ஊதியமும் பெற வேண்டிய நிர்பந்த நிலைமைக்கு ஆளாகி அதன் காரணமாக அந்த கைய ஆசிரியர்களுக்கு மிகுந்த கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது பற்றிய அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை கனம் நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

* The Hon. Sri M. BHAKTAVATSALAM : Pre-vocational instructors are employed in higher elementary schools for giving instruction in pre-vocational subjects in higher elementary standards.